14 SEP 2012
சென்னை-34.
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

043782 சுருக்கம்

இந்து சமய அறநிலையத்துறை – சீனாவில் உள்ள மானசரோவர் மற்றும் நேபாளத்தில் உள்ள முக்திநாத் ஆகிய இடங்களுக்கு புனித யாத்திரை மேற்கொள்ளும் தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்துக்களுக்கு மானியம் வழங்கும் திட்டம் – அரசாணை வெளியிடப்பட்டது – அரசாணைக்கு திருத்தம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (அறி1.1) துறை</u>

அரசாணை (நிலை) எண். 314

நாள் 12.09.2012
திருவள்ளுவராண்டு – 2043
ஆவணி –27

<u>படிக்கப்பட்டவை:–</u>

1. அரசாணை (நிலை) எண்.259, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (அறி 1.1)துறை, நாள் 24.07.2012.

2. ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை கடித ந.க.எண். 3332/2012/கே4, நாள் 31.08.2012.

=======

<u>ஆணை:</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் சீனாவில் உள்ள மானசரோவர் மற்றும் நேபாளத்தில் உள்ள முக்திநாத் ஆகிய இடங்களுக்கு புனித யாத்திரை மேற்கொள்ளும் இந்துக்களுக்கு மானியம் வழங்கப்படும் என 15.5.2012 அன்று தமிழக சட்டமன்றப் பேரவையில் அறிவித்ததன் அடிப்படையில் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் சில நெறிமுறைகளின் அடிப்படையில் பயண திட்டத்தை செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டது.

2. இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி முக்திநாத் யாத்திரை செல்லும் பயணாளிகளுக்கு சுற்றுலாத்துறையுடன் இணைந்து தனியார் பயண ஏற்பாட்டாளரைத் தேர்வு செய்து அவர்கள் மூலம் பயண ஏற்பாடு செய்யும்பொழுது பயணிகளின் போக்குவரத்து, பாதுகாப்பு போன்ற பொறுப்புகளை மேற்கொள்வதில் நிர்வாக சிரமங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் மானசரோவர் யாத்திரை செல்லும் பயணாளிகள் வெளியுறவுத்துறை மூலம் தேர்வு செய்து யாத்திரை சென்று வந்தபின்பு அதற்கான சான்று வெளியுறவுத்துறையிடம் பெற்று மானியம் மட்டும் இந்து சமய அறநிலையத்துறையால் வழங்கப்படவுள்ளது போல் முக்திநாத் யாத்திரைக்கு பயணாளிகள் தங்கள் சொந்த செலவில் ஏற்பாடு செய்து யாத்திரை சென்று முடித்த நாளிலிருந்து அதற்கான ஆதாரத்தை ஒரு மாதத்திற்குள் சமர்ப்பித்தால் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அரசு மானியம், இந்து சமய அறநிலையத்துறையால் வழங்கப்படும் என்று அரசாணையை திருத்தியமைத்து உத்தரவு வழங்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டு சில நிபந்தனைகளையும் தெரிவித்துள்ளார்.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் தெரிவித்துள்ள கருத்துக்களை ஏற்று, சீனாவில் உள்ள மானசரோவர் மற்றும் நேபாளத்தில் உள்ள முக்திநாத் ஆகிய இடங்களுக்கு புனித யாத்திரை மேற்கொள்ளும் இந்துக்களுக்கு மானியம் அனுமதிப்பது குறித்து ஆணையிடப்பட்ட மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பத்தி 3ல் "முக்திநாத் யாத்திரை – பயணாளிகளை தேர்வு செய்தல் மற்றும் மானியம் வழங்குவதற்கான நெறிமுறைகள்" என்ற தலைப்பின் கீழ் உள்ள நெறிமுறைகளுக்குப் பதிலாக கீழ்க்கண்ட நெறிமுறைகளை வகுத்து அரசாணைக்கு திருத்தம் செய்து அரசு ஆணையிடுகிறது:-

- விண்ணப்பதாரர் தமிழ்நாட்டை சேர்ந்த இந்து மதத்தை சார்ந்தவராக இருத்தல் வேண்டும். அதற்கான வட்டாட்சியர் சான்று பெறவேண்டும்.
- விண்ணப்பதாரர் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 70 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- யாத்திரைக்கான முழு செலவினத்தையும் யாத்ரீகரே ஏற்று யாத்திரையை மேற்கொள்ள வேண்டும். யாத்திரையை முடித்ததற்கு ஆதாரமாக பயணச்சீட்டு, வருமானச் சான்று, இருப்பிடச் சான்று, 3 புகைப்படங்கள், பயணத்திட்ட நகல் சான்று ஆகியவற்றுடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையருக்கு அரசு மானியம் வேண்டி யாத்திரையை முடித்த 1 மாத காலத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.
- மானியத்திற்கான விண்ணப்பங்கள் இந்து சமய அறநிலையத்துறையால் ஆய்வு செய்யப்பட்டு 250 யாத்ரீகர்களுக்கு தலா ரூ.10,000/– மானியம் அளிக்கப்படும்.
- 250 விண்ணப்பங்களுக்கு மேல் பெறப்படின் பயணாளிகள் இந்து சமய அறநிலையத்துறையால் கணினி குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

- யாத்ரீகர்கள் மானியம் பெறுவதற்கான உயர்ந்தபட்ச வருமான வரம்பு ஏதும் இல்லை. பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- பயனாளி தனது ஆயுட்காலத்தில் ஒருமுறை மட்டுமே மானியம் பெறத் தகுதியானவர்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மூ.இராசாராம்
அரசு செயலாளர்.

பெறுநர்
ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, சென்னை–34.
முதன்மைச் செயலாளர், சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, சென்னை–9.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
மாநிலக் கணக்காயர், (தணிக்கை I & II ), சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர்,சென்னை–9.
மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (தவ.அநி(ம)செ) / (வ.செ பொது–I) / (வ.செ பொது–II)த் துறை, சென்னை–9.
செயலாளரின் தனிச் செயலர், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்
செய்தித் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12/09/2012
பிரிவு அலுவலர்.